**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS,
# MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 502 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 11** |
| **Name** | : | **திருமதி. வனிதா** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.08.2025**

எதிரி-6 ஆஜர். எதிரி-1 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவுப்படி மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## முதல் விசாரணை :

நான் மதுரை முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன். தற்போதும் S.S. மருத்துவமனையில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் 5,6 எதிரிகளைத் தெரியும். மற்ற 1 முதல் 4 எதிரிகளைத் தெரியாது. 09.06.2016 ம் தேதி ஆர்த்தி என்ற கர்ப்பிணி பெண் அவரது தாயாருடன் மருத்துவமனைக்கு வந்தார். 10.06.2016 ம் தேதி ஆர்த்திக்கு ஆண் குழந்தை பிறந்தது. அப்போது டாக்டருடன், நர்ஸ் மாரியம்மாள், கல்பானா, ஆகியோர் டாக்டருடன் இருந்தார்கள். பொதுவாக பிரசவம் ஆகும்போதோ, கருக்கலைப்பு செய்தாலோ நான் தான் அந்த துணிகளை சுத்தம் செய்வேன். அந்த குழந்தையை discharge ஆகும் போது ஆர்த்தி கையில் எடுத்துச் சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, ஆர்த்தி எங்கள் மருத்துவமனையில் இருந்து Discharge ஆகும்போது, அவர்கள் குழந்தையை எடுத்துச் செல்லவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதும் நான் அதே மருத்துவமனையில் தான் வேலை பார்த்து வருகிறேன். அதனால் எனது உரிமையாளரையும் Doctor ஐயும் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில், உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை..

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 502 / 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW : 12** |
| **Name** | **:** | **திருமதி. மாரியம்மாள்** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.08.2025**

எதிரி-6 ஆஜர். எதிரி-1 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவுப்படி மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் T கல்லுப்பட்டி, வன்னிவேலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2016 ம் ஆண்டு, SS மருத்துவமனையில் நர்சாக வேலை பார்த்தேன். 5,6 எதிரிகளைத் தெரியும். மற்ற 1 முதல் 4 எதிரிகளைத் தெரியாது. கடந்த 09.06.2016 ம் தேதி நான் இரவு பணியில் இருந்த போது, ஆர்த்தி என்ற பெண் பிரசவத்திற்காக வந்தார். மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் நோயாளிகளின் விபரங்களை நான் பதிவு செய்யமாட்டேன். அவரது விபரங்களை பதிவு செய்தார்களா இல்லையா என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. 10.06.2016 ம் தேதி ஆர்த்திக்கு எங்கள் மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. நானும், கல்பனாவும் பிரசவத்திற்கு உதவியாக இருந்தோம். 12.06.2016 ம் தேதி மருத்துவமனையில்

இருந்து discharge ஆகி போகும் போது, குழந்தையை அவர்களோடு எடுத்துச் சென்றார்கள். வனிதா அவர்கள் அறையை சுத்தம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, ஆர்த்திக்கு admission போட்ட தகவல்களை எந்த note லும் பதிய வேண்டாம் என்று டாக்டர்.சாந்தி சொன்னதாகவும், அதனால் ஆர்த்தி பற்றிய தகவல்களை பதிவேட்டில் பதியவில்லை என்றும் ஆர்த்தி மற்றும் அவரது குடும்பத்தினர் discharg ஆகி செல்லும் போது, ஆண் குழந்தையை அவர்களுடன் எடுத்துச் செல்லவில்லை என்றும் மேற்படி விபரத்தினை யாரிடமும் சொல்லக் கூடாது என்று டாக்டரும், அவரது கணவரும் எங்களிடம் கூறினார்கள் என்றும் ஆர்த்தியின் admit மற்றும் சிகிச்சை அளித்த விபரம், Discharge ஆகியவற்றை ஒரு தாளில் எழுதி, அதனை டாக்டர்.,சாந்தி அவர்கள் அவரது custody யில் வைத்திருந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 5,6 எதிரிகளிடம் நான் பணியாற்றிய விசுவாசத்தினால் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில், உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை